செய்தி வெளியீடு:

செ.வெ.எண்:27 நாள்:14.11.2017

**நீலகிரி மாவட்டம் உதகை சேரிங்கிராஸ் தோட்டக்கலைத்துறை வணிக வளாகத்தில் இன்று (14.11.2017) குழந்தைகள் தின விழா நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நீலகிரி மாவட்டம் உதகை சேரிங்கிராஸ் தோட்டக்கலைத்துறை வணிகவளாகத்தில் இன்று (14.11.2017) மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு துறையின் சார்பில் நடைபெற்ற குழந்தைகள் தின விழா நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பேசியதாவது,

கல்வி தான் சமூக ஏற்றத் தாழ்வை தகர்த்திடும் சக்திமிக்கது. கடின உழைப்பு, ஒழுக்கம், திட்டமிடுதல் ஆகியவற்றை கடைபிடித்து மாணவ, மாணவியர்கள் உழைத்து நன்றாக படித்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். மேலும் குழந்தைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. முக்கியமாக குழந்தைகள் இல்லங்கள், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பது, தத்தெடுப்பதற்கு வழிகாட்டுதல், குழந்தை கடத்தலை தடுத்தல், குழங்தைகளுக்கான சட்டங்கள், தற்காலிக பராமரிப்பு, பிற்காப்பு பராமரிப்பு மற்றும் நிதிஉதவி, குழந்தை திருமணத்தை தடுத்தல், கல்வி இடைநிற்றலை தடுத்தல், தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதி மற்றும் இல்லங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி பதிவு செய்தல், குழந்தைகள் பிச்சை எடுத்தலை தடுத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் உருவாக்கி உதவி செய்து வருகின்றது. எனவே ஒவ்வொரு குழந்தைகளும் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. ஏதாவது பிரச்சனைகள் உங்களுக்கோ மற்றவர்களுக்கோ ஏற்பட்டால் உடனடியாக அவசர உதவிக்காக 1098 என்ற இந்த எண்ணில் உடனடியாக தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார். மேலும் மாணவ, மாணவிகளாகிய நீங்கள் தங்களின் பெற்றோர்களிடம் கூறி டெங்கு தடுப்பு நடவடிக்கையாக ஒவ்வொருவரும் தங்களது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்து கொள்ள அறிவுறுத்த வேண்டும் என தெரிவித்தார். பின்னர் மாணவ, மாணவியர்களிடம் துண்டு பிரசுரங்களையும், அவசர உதவி தேவைப்பட்டால் தபால் மூலம் தெரிவிக்க தபால் அட்டையையும் வழங்கினார்.

அதனை தொடர்ந்து திபெத்தியன் மார்கெட்டில் டெங்கு தடுப்பு மற்றும் சுகாதார பணிகள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.முகம்மதுயாசர் அராபத், அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.